சேலம் ஹோம் டுடே பர்னிச்சர் கடையின் சிறப்பு தள்ளுபடி விற்பனை தொடக்க விழா, ஜங்சன் மெயின் ரோட்டில் உள்ள தி சென்னை சில்க்ஸ் வளாகத்தில் நடைபெற்றது.

சேலம் ஹோம் டுடே பர்னிச்சர் கடையில் 40 சதவீதம் வரை சிறப்பு தள்ளுபடி விற்பனை

சேலம்

சேலம் ஹோம் டுடே பர்னிச்சர் கடையில் 40 சதவீதம் வரை சிறப்பு தள்ளுபடியில் விற்பனை நடக்கிறது.

சேலம் ஹோம் டுடே பர்னிச்சர் கடையின் சிறப்பு தள்ளுபடி விற்பனை தொடக்க விழா, ஜங்சன் மெயின் ரோட்டில் உள்ள தி சென்னை சில்க்ஸ் வளாகத்தில் நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினர்களாக முரளி, சஞ்ஜீவி (பிரபல பாடகர்கள் - மேட்டூர் பிரதர்ஸ்) பங்கேற்றனர். முதல் விற்பனையை கார்த்திகேயன் பெற்றுக் கொண்டார். விழாவில் ஜீவா, ரதிபிரியா, நந்தினி, பிரதீப் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

வீட்டிற்கு தேவையான அனைத்து பர்னிச்சர்களுக்கும் 40 சதவீதம் வரை சிறப்பு தள்ளுபடி சலுகை வழங்கப் பட்டுள்ளது. வாடிக்கையாளர்கள் இந்தஅரிய வாய்ப்பை பயன்படுத்தி மகிழ அழைப்பதாக நிறுவனத்தின் மேலாளர் தெரிவித்தார்.

ரூ.3.50 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்

மேட்டூர்

கொங்கணாபுரத்தில் ரூ.3.50 லட்சத்துக்கு கொப்பரைத் தேங்காய் ஏலம் போனது.

கொங்கணாபுரம் பகுதியில், திருச்செங்கோடு கூட்டுறவு வேளாண் விற்பனைச் சங்கத்தின் கிளை உள்ளது. இங்கு நேற்று கொப்பரைத் தேங்காய் ஏலம் நடந்தது.

முதல் தரம் கிலோ ரூ.78.25 முதல் ரூ.87.85 வரையும், 2-வது தரம் ரூ.50.55 முதல் ரூ.65.65 வரையும் ஏலம் போனது. மொத்தம் 100 மூட்டைகள் ரூ.3.50 லட்சத்துக்கு விற்பனையானது.

சேலம் கோரிமேடு அருகே புதியதாக டாஸ்மாக் மதுக்கடை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளிக்க வந்த மக்கள். படம்: எஸ்.குரு பிரசாத்

சேலம் கோரிமேடு அருகே புதியதாக

டாஸ்மாக் மதுக்கடை அமைக்க மக்கள் எதிர்ப்பு

சேலம்

சேலம் கோரிமேடு அருகே புதியதாக டாஸ்மாக் மதுக் கடை அமைக்கக் கூடாது, என்று அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

சேலம் கோரிமேடு பொன்நகர் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் சிலர், சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் நேற்று மனுவை செலுத்தினர்.

மனு குறித்து அவர்கள் கூறியது:

சேலத்தில், ஏற்காடு சாலையை ஒட்டி அமைந்துள்ள கோரிமேட்டில் ஏற்கெனவே 2 டாஸ்மாக் மதுபானக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இதில், ஒரு மதுபானக் கடை எதிரே உள்ள காலி நிலத்தில் புதியதாக டாஸ்மாக் மதுபானக் கடை ஒன்றை அமைப்பதற்கு திமுக பிரமுகர் ஒருவர் முயற்சித்து வருகிறார்.

டாஸ்மாக் மதுபானக் கடைகள் பொதுமக்களுக்கு இடையூறாக இருப்பதால் அவற்றை அகற்ற வேண்டும் என்று இப்பகுதி மக்கள் ஏற்கெனவே புகார் அளித்துள்ளோம்.

மருத்துவமனை, வங்கி ஏடிஎம் என மக்கள் நடமாட்டம் மிகுந்த இடத்தில் டாஸ்மாக் மதுபானக் கடை செயல்படுவதால் பொதுமக்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டு வருகிறது. இந்நிலையில், தற்போது மேலும் ஒரு மதுபானக் கடை மற்றும் பார் அமைத்தால் மக்கள் வாழ முடியாத சூழ்நிலை உருவாகிவிடும்.

ஏற்காடு செல்லும் சுற்றுலாப் பயணிகள் ஏராளமானோர், இப்பகுதி வழியாக சென்று வரும் நிலையில், டாஸ்மாக் மதுபானக் கடைகள் போக்குவரத்துக்கும் இடையூறாக உள்ளன. எனவே, கோரிமேடு பொன்நகர் பகுதியில் புதியதாக டாஸ்மாக் மதுக்கடை அமைக்க தடை விதிக்க வேண்டும், என்றனர்.

ஈரோட்டில் 3 கிலோ கஞ்சா பறிமுதல்

ஈரோடு

ஒடிசா மாநிலத்தில் இருந்து ரயில் மூலம் கஞ்சா கடத்தி வந்தவரை ஈரோடு மதுவிலக்குப் பிரிவு போலீஸார் கைது செய்தனர்.

ஈரோடு ரயில் நிலையத்தில், ரயில்வே காவல்துறையினருடன் இணைந்து, மதுவிலக்குப் பிரிவு போலீஸாரும், வடமாநிலங்களில் இருந்து வரும் ரயில்களில் சோதனை மேற்கொண்டனர். அப்போது ஒடிசா மாநிலம் சாம்பல்பூரில் இருந்து ஈரோடு வந்த ரயிலில், முன்பதிவு செய்யாத பெட்டியில் பயணித்த கைலாஸ் சந்திரா என்பவரிடம் விசாரணை நடத்தினர்.

இதில் அவர் ஒடிசாவில் இருந்து 3 கிலோ கஞ்சாவை கடத்தி வந்ததும், ஈரோட்டில் விற்பனை செய்ய இருந்ததும் தெரியவந்தது.

இதையடுத்து அவரை கைது செய்த போலீஸார், கஞ்சாவை பறிமுதல் செய்து விசாரித்து வருகின்றனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படும்முன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர் கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.

மின்னஞ்சல் முகவரி: repsalem@hindutamil.co.in

தபால் வாக்கு எண்ணும் அலுவலர்களுக்கு பயிற்சி

தேர்தல் ஆணைய வழிகாட்டுதல்களை பின்பற்ற அறிவுறுத்தல்

சேலம்

சேலம் மக்களவைத் தொகுதியில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி வாக்கு எண்ணும் மையமான கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரியில் வரும் 4-ம் தேதி காலை 8 மணிக்கு தொடங்குகிறது. இதில், தபால் வாக்குகள் எண்ணும் பணியில் ஈடுபடவுள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தேர்தல் நடைமுறைகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த பயிற்சி ஆட்சியர் பிருந்தாதேவி தலைமையில் நேற்று நடந்தது.

இதில் ஆட்சியர் பேசியது:

சேலம் மக்களவைத் தொகுதியில் 85 வயதுக்கு மேற்பட்டவர்கள், மாற்றுத்திறனாளிகள், தேர்தல் பணியில் ஈடுபட்ட அலுவலர்கள் மற்றும் காவல் துறையினர் என மொத்தம் 10,748 தபால் வாக்குகள் பதிவாகியுள்ளன. தபால் வாக்குகள் எண்ணுவதற்கென 6 மேசைகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மேசைக்கும் 1 உதவி தேர்தல் நடத்தும் அலுவலர், 1 வாக்குகள் எண்ணும் மேற்பார்வையாளர், 2 வாக்குகள் எண்ணும் உதவியாளர்கள் மற்றும் 1 நுண்பார்வையாளர் என தலா 5 நபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு மேசைக்கும் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் தலா 1 முகவரை நியமித்துக்கொள்ளலாம். ஒரு சுற்றுக்கு ஒவ்வொரு மேசைக்கும் தலா 500 தபால் வாக்குகள் வழங்கப்பட்டு எண்ணப்படும்.

தபால் வாக்குகள் எண்ணும் பணியில் ஈடுபடும் அலுவலர்கள் செல்போன், எலெக்ட்ரானிக் பொருட்கள் உள்ளிட்ட தேர்தல் ஆணையத்தால் தடை செய்யப்பட்டுள்ள எந்த பொருட் களையும் எடுத்துச் செல்வதற்கு அனுமதிஇல்லை.வாக்குஎண்ணிக்கை யில் பங்கேற்பதற்காக நியமிக்கப் பட்டுள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன. அடையாள அட்டை வைத்திருப்ப வர்கள் மட்டுமே வாக்கு எண்ணிக்கை மையங்களில் அனுமதிக்கப் படுவார்கள். தபால் வாக்குகளில் உள்ள படிவங்களை முறையாக ஆய்வு செய்வது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ள படிவங்களை முறையாக பூர்த்தி செய்திடவும், தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களை முறையாக பின்பற்றியும் பணியாற்றிட வேண்டும்.

இவ்வாறு பேசினார்.

பயிற்சியில் உதவி ஆட்சியர் (பயிற்சி) அக்ரிதி சேத்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஜெகநாதன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்கள்) சிவசுப்பிரமணியன் உள்பட அலுவலர்கள் பங்கேற்றனர்.

தென்மேற்கு பருவமழைக்கு முன்பாக

நீர்வழித்தட ஆக்கிரமிப்புகளை அகற்றி ஏரிகளை விரைந்து தூர்வார வேண்டும்

இயற்கை ஆர்வலர்கள் வலியுறுத்தல்

வி.சீனிவாசன்

சேலம்

தென்மேற்கு பருவ மழை தொடங்கவுள்ளநிலையில், நீர் வழித்தட ஆக்கிரமிப்புகளை அகற்றி, ஏரிகளை தூர்வார வேண்டும் என இயற்கை ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

சேலம் மாவட்டத்தில் கடந்த மார்ச் 20-ம் தேதி முதல் கடும் வெயில் தாக்கம் நீடித்து வந்த நிலையில், கடந்த வாரம் சில நாட்கள் தொடர்ந்து மழை பெய்தது. இதனால், வெயிலின் தாக்கத்தில் இருந்து பொதுமக்கள் விடுபட்டுள்ளனர். தற்போது, தென்மேற்கு பருவ மழை தொடங்க உள்ள நிலையில் மாவட்டத்தில் உள்ள ஏரிகளை தூர் வாரியும், நீர் வழித்தட ஆக்கிரமிப்புகளை அகற்றவும் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இயற்கை ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து இயற்கை ஆர்வலர்கள் கூறியதாவது:

சேலம் மாவட்டத்தில் நீர்வளத் துறையின் கட்டுப்பாட்டில் 88 ஏரிகள் உள்ளன. மாவட்டத்தின் முக்கிய ஆறுகளான சரபங்கா நதி, வசிஷ்ட நதி, ஸ்வேத நதியும், சேலம் மாநகரத்தில் திருமணிமுத்தாறு உள்ளிட்டவை இருந்தாலும், மழைக்காலங்களில் மட்டுமே நீர் செல்லும் நதிகளாக உள்ளன. மற்ற காலங்களில் கழிவுநீர் கால்வாயாக மாறி விடுகின்றன.

சேலம் மாவட்டத்தில் 88 ஏரிகள் இருந்தாலும், பல ஏரிகள் நீரின்றி வறண்டும், சில ஏரிகளில் குட்டைபோலவும் தண்ணீர் உள்ளன. தென்மேற்கு பருவமழை காலங்களில் மலை, குன்றுகளிலிருந்து சிற்றோடையாக ஓடி, ஆறு, ஏரி, குளங்களை தண்ணீர் சென்றடைகிறது. சேர்வராயன் மலை, ஜருகு மலை, பச்சைமலை, கல்வராயன் மலை, பாலமலை, கஞ்சமலை என சேலம் மாவட்டத்தை சூழ்ந்துள்ள மலைகள் மழை நீரை, ஆறாக மாற்றும் வல்லமையுடன் நிமிர்ந்து நிற்கின்றன.

ஆனால், மலை அடிவாரங்களை மழை நீர் வந்தடைவதற்கு முன்பாக எஸ்டேட் அதிபர்கள் அதனை மறித்து, கிணறுகளுக்கு மடை மாற்றும் நிலை உள்ளது. சில இடங்களில் நீர்வழித்தடத்தை தனியார்கள் ஆக்கிரமித்தும், கட்டிடங்களை எழுப்பியும் ஆறு, ஏரி, குளங்களுக்கு நீர் வந்தடையாமல் தடுத்து விடுகின்றனர்.

தண்ணீர் பஞ்சம் வராது

இந்நிலையில், நீர் நிலைகளுக்கு தண்ணீர் வரும் வகையில் நீர் வழித்தட ஆக்கிரமிப்புகளை அகற்றியும், அனைத்து ஏரிகளையும் தூர் வாரவும் மாவட்ட நிர்வாகம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் நிலத்தடி நீர் மட்டம் உயரவும், வரும் காலங்களில் தண்ணீர் பஞ்சமின்றி மக்கள் வாழவும் ஏற்புடையதாக இருக்கும். மேலும், மழை நீர் ஏரிகளில் தேங்கும்போது மண் திருட்டு தடுக்க முடியும். ஏரிகளில் உள்ள சீமைக் கருவேல மரங்களை அகற்றுவதனால், பருவமழை காலங்களில் தேங்கும் மழைநீர் மற்ற காலங்களிலும் நீடித்து நிலத்தடி நீர்மட்டத்தை காக்கும். மேலும், ஏரிகளில் தொடர்ந்து தண்ணீர் தேங்கினால் பறவைகளின் புகலிடமாக மாற வாய்ப்புள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

வாக்கு எண்ணிக்கை பணி

ஈரோடு தொகுதிக்கு 2 மேற்பார்வையாளர்கள் நியமனம்

ஈரோடு

ஈரோடு மக்களவைத் தொகுதி வாக்கும் எண்ணும் பணிக்கு மேற்பார்வையாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

இது தொடர்பாக ஈரோடு ஆட்சியர் ராஜ கோபால் சுன்கரா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

ஈரோடு மக்களவைத் தொகுதி வாக்கு எண்ணிக்கை, ஈரோடு அரசு பொறியியல் கல்லூரியில் வரும் 4-ம் தேதி நடக்கிறது. அன்று காலை 8 மணிக்கு தபால் வாக்கு எண்ணிக்கையும், 8.30 மணிக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திர வாக்கு எண்ணிக்கையும் தொடங்கவுள்ளது.

ஈரோடு மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட குமாரபாளையம், ஈரோடு கிழக்கு மற்றும் ஈரோடு மேற்கு ஆகிய மூன்று சட்டப்பேரவைத் தொகுதிகளின் வாக்கு எண்ணும் பணியின் மேற்பார்வையாளராக ராஜீவ் ரஞ்சன் மீனா, மொடக்குறிச்சி, காங்கேயம் மற்றும் தாராபுரம் ஆகிய மூன்று சட்டப்பேரவைத் தொகுதிகளின் வாக்கு எண்ணும் பணியின் மேற்பார்வையாளராக காயத்ரி என் நாயக் ஆகியோர் இந்திய தேர்தல் ஆணையத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர், என தெரிவித்துள்ளார்.

rakesh.sridhar@hindutamil.co.in

இந்திய பல் மருத்துவ சங்கம் திருச்செங்கோடு கிளையின் சார்பாக, நேற்று நடந்த உலக புகையிலை எதிர்ப்பு தின பேரணியில் மாறுவேடம் அணிந்து விழிப்புணர்வில் ஈடுபட்ட கலைஞர்கள்.

நான்காவது நாளாக சதம்

ஈரோட்டில் 105 டிகிரி வெப்பம் பதிவு

ஈரோடு

ஈரோட்டில் நான்காவது நாளாக நேற்றும் வெயில் சதமடித்தது. நேற்று அதிகபட்சமாக 105.44 டிகிரி வெப்பம் பதிவானது.

ஈரோடு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த இரு வாரங்களாக பெய்த தொடர்மழையால், அக்னி நட்சத்திர வெப்பத்தின் பாதிப்பில் இருந்து ஈரோடு மக்கள் தப்பினர்.

தற்போது கோடை மழை முடிவுக்கு வந்துள்ள நிலையில், ஈரோட்டில் மீண்டும் வெப்பத்தின் தாக்கம் தொடங்கியுள்ளது. கடந்த 28 மற்றும் 29-ம் தேதி ஈரோட்டில் 100 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பம் பதிவான நிலையில், நேற்று முன் தினம் 103.64 டிகிரி பதிவானது.

நேற்று மேலும் வெப்பநிலை அதிகரித்து, ஈரோட்டில் 105.44 டிகிரி வெப்பம் பதிவானது. அண்டை மாவட்டமான நாமக்கல்லில் 100 டிகிரியும், சேலத்தில் 101.84 டிகிரியும் பதிவானது.

ஈரோடு மாவட்டத்தில் இன்றும் (1-ம் தேதி), நாளையும் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளதால் வெப்பத்தின் தாக்கம் குறைய வாய்ப்புள்ளது.

வாக்கு எண்ணிக்கையையொட்டி

ஜூன் 4-ம் தேதி மதுக்கடைகளை மூட உத்தரவு

சேலம்/ஈரோடு

மக்களவைப் பொதுத் தேர்தல் வாக்கு எண்ணிக்கையை முன்னிட்டு வரும் 4-ம் தேதி சேலம், ஈரோடு மாவட்டத்தில் உள்ள மதுபானக் கடைகள் மற்றும் மதுபானக் கூடங்களை மூட உத்தரவிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஆட்சியர்கள் பிருந்தாதேவி (சேலம்), ராஜகோபால் சுன்கரா (ஈரோடு) விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

மக்களவைப் பொதுத் தேர்தலில் பதிவான வாக்குகள் வரும் 4-ம் தேதி எண்ணப்படுகிறது. இதையொட்டி 4-ம் தேதி அனைத்து டாஸ்மாக் மதுபானக் கடைகள், மதுபானக் கூடங்கள் மற்றும் எப்.எல்.1 முதல் எப்.எல்.11 வரை அனைத்து மதுக் கூடங்களும் மூடப்பட வேண்டும். அதேபோல, உரிமம் பெற்ற ஓட்டல்கள் மற்றும் கிளப்புகளில் இயங்கி வரும் மதுபானக் கூடங்கள், மதுக்கடைகள் அனைத்தும் மூடப்பட வேண்டும். அரசு உத்தரவை மீறி மதுபானக் கடைகள், கூடங்கள் திறந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு கூறியுள்ளனர்.

HINDUJA HOUSING FINANCE

இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

தலைமை அலுவலகம்: 167-169, 2 வது தளம், அண்ணா சாலை, சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை – 600015.
கிளை அலுவலகம்: எண்.782/A2, RSR வளாகம், கத்தோலிக் வங்கி மேல்தளம், 1 வது தளம், சேலம் சாலை, நாமக்கல் – 637001 & எண். 36, ஸ்ரீ கிருஷ்ணா வளாகம், 1 வது தளம், சத்தி சாலை, ஈரோடு –638003

பிற்சேர்க்கை-IV **சுவாதீன அறிவிப்பு** (அசையா சொத்துக்களுக்காக)

பிணைகாப்பு, நிதிசொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைகாப்பு அமலாக்கச் சட்டம், 2002 மற்றும் பிணைகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 கீழ் 13 (12), உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 விதி 3ன் கீழ் இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்-ன் கீழே கையொப்பமிட்ட அங்கீகாரம் பெற்ற அதிகாரி மூலம் கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள்/இணை கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ள தேதியில் எங்களது சென்னை கிளை மூலமாக கேட்பு அறிவிப்பு அனுப்பப்பட்டு அதில் குறிப்பிட்டுள்ள கடன் நிலுவை தொகையை கேட்பு அறிவிப்பு பெறப்பட்ட தேதியிலிருந்து 60 தினங்களுக்குள் செலுத்தும்படி கோரப்பட்டது.

கடன்தாரர்கள்/இணை கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள் செலுத்த வேண்டிய கடன் தொகையை முழுவதும் செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்தாரர்கள்/இணை கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள் மற்றும் பொதுவாக பொது மக்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பது என்னவென்றால், கீழே கையொப்பமிட்டுள்ளவர்கள் தனக்குள்ள அதிகாரத்தின் மூலம் கீழே விரிவாக குறிப்பிட்டுள்ள சொத்துக்களை பிணைகாப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 விதி 8 பிரிவு 13 உட்பிரிவு 4-ன் கீழ், கீழே குறிப்பிட்டுள்ள தேதியில் சுவாதீனம் செய்துள்ளார் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

சட்டம் பிரிவு 13 துணை பிரிவு 8-ன் படி கடனீட்டு சொத்துக்களை மீட்டு கொள்வதற்கு கால அவகாசம் உள்ளது என்று கடன்தாரர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

இதன் மூலம் கடன்தாரர்கள்/இணை கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள் மற்றும் பொதுவாக பொது மக்களுக்கும் தெரிவிப்பது இந்த சொத்துக்களின் மீது எந்தவிதான பேரங்களும் வைத்து கொள்ளக் கூடாது என்று எச்சரிக்கை செய்யப்படுகிறது. மேலும் சொத்துக்களின் மீது ஏதாவது பேரம் வைத்து கொண்டால் அது இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டுக்கு செலுத்த வேண்டிய கீழே குறிப்பிட்டுள்ள நிலுவை தொகை மற்றும் பின் வட்டி சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டவையாகும் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது

கிளை: நாமக்கல், கடன்தாரர்: திரு. கண்ணையன். S, இணை கடன்தாரர்: 1. திருமதி. அருள்மணி. K, இருவரும் வசிப்பது 167, அம்மன் புது, ஆவுடையார்பாறை, கிராமம், ஈரோடு, தமிழ்நாடு, இந்தியா – 638151. கடன் கணக்கு எண்கள்: TN/NMK/NMKK/A000000043 & CO/CPC/CPOF/A000001758, கேட்பு அறிவிப்பு தேதி: 29.03.2024, நிலுவைத் தொகை ரூ. 9,06,848/- மற்றும் வட்டியுடன். சுவாதீன தேதி: 30.05.2024.
அசையா சொத்துக்களின் விபரங்கள்: ஈரோடு மாவட்டம், ஈரோடு பதிவு மாவட்டம், கொடுமுடி SRO., ஆவுடையார்பாறை கிராமம், பழைய S.No. 74/C, புதிய S.No. 74/3 புஞ்சை ஹெக்டர் 2.11.5 இந்த நிலத்தில் Asst ரூ. 2.90 கீழே குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளுக்குள் 1972 ¾ சதுர அடி வரை இந்த விபரங்களுடன் தொடர்புடையது. அதற்கான எல்லைகள் மற்றும் அளவீடுகள்:– **நான்கு எல்லைகள்:** வடக்கு: பூங்கொடிக்கு சொந்தமான சொத்து, தெற்கு: லட்சுமி கிருஷ்ணனின் மனைவி சொந்தமான சொத்து, கிழக்கு: ஆவுடையார்பாறை ஊராட்சி வடக்கு தெற்கு வீதி, மேற்கு: பொன் கந்தசாமி சொத்து. **அளவீடு:** வடக்கு: கிழக்கிலிருந்து மேற்காக 63 ¾ அடி, கிழக்கு: வடக்கிலிருந்து தெற்காக 31 ¾ அடி, தெற்கு: கிழக்கிலிருந்து மேற்காக 62 அடி, மேற்கு: வடக்கிலிருந்து தெற்காக 31 அடி, மொத்தம் 1972 ¾ சதுர அடி மேற்கண்ட எல்லைகளுக்குள், பழைய S.No.74/C, புதிய S.No.76/3A, கட்டிடங்கள், பொருத்துதல்கள் மற்றும் பாதை உரிமைகள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட எளிதான உரிமைகள்.

கிளை: நாமக்கல், கடன்தாரர்: திருமதி ஸ்ரீதேவி. V, இணை கடன்தாரர்: திரு. விஜயகுமார். N, இருவரும் வசிப்பது எண். 18/2, குடி தெரு, மறவபாளையம், பரமத்தி, கிராமம், நாமக்கல், தமிழ்நாடு, இந்தியா – 637207. கடன் கணக்கு எண்கள்: TN/NMK/NMKK/A000000050 & CO/CPC/CPCO/A000000004, கேட்பு அறிவிப்பு தேதி: 29.03.2024, நிலுவைத் தொகை ரூ. 35,71,200/- மற்றும் வட்டியுடன். சுவாதீன தேதி: 30.05.2024.
அசையா சொத்துக்களின் விபரங்கள்: நாமக்கல் மாவட்டம் நாமக்கல் R.D., பரமத்தி துணைப் பதிவு அலுவலகம், பரமத்தி கிராமம், மறவபாளையம் தெரு, நத்தம்தில், அனைத்து நிலம் மற்றும் கட்டிடத்தின் பழைய S.No. 493, புதிய S.No. 844/25 பரப்பளவு 0.0157.5 சதுர அடியில் ரூ. 2.00 இந்த நிலத்தில் 1695 சதுர அடி நிலம் விபரங்களுடன் தொடர்புடையது. **நான்கு எல்லைகள்:** வடக்கு: கிழக்கு மேற்கு பாதை, தெற்கு: ராணியின் சொத்து, கிழக்கு: வடக்கு தெற்கு பஞ்சாயத்து சாலை, மேற்கு: சடையப்பிள்ளை வகையாரின் நிலம். **அளவீடு:** வடக்கு – கிழக்கிலிருந்து மேற்கு 40 அடி, கிழக்கு – வடக்கிலிருந்து தெற்கு 42 ¾ அடி, தெற்கு – கிழக்கு மேற்கு 40 அடி, மேற்கு – வடக்கு தெற்கு 42 அடி, மொத்தம் 1695 சதுர அடி. மேற்கூறிய எல்லைகளுக்குள் மொத்தம் 1695 சதுர அடி நிலம் S.No. 844/25ல் கிழக்கு மேற்கில் இருபுறமும் 33 ¾ அடி; தெற்கு-வடக்கு இருபுறமும் 32 அடி அளவு 1080 சதுர அடி R.C.C. தரை தளத்தில் மொட்டை மாடி கட்டிடம் மற்றும் முதல் தளத்தில் 380 சதுர அடி கட்டிடம் மற்றும் இரண்டாவது மாடியில் 324 ½ R.C.C. மாடி கட்டிடம் மற்றும் மேலே உள்ள கட்டிடத்தின் அனைத்து பொருத்துதல்கள் மற்றும் அனைத்து பாதை உரிமைகள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஒரு சுலபமான உரிமைகள் மற்றும் மேலே உள்ள சொத்து அதிகார வரம்பிற்கு உட்பட்ட பரமத்தி டவுன் பஞ்சாயத்தை சேர்ந்தது.

கிளை: ஈரோடு, கடன்தாரர்: திரு. குமரேசன். S, இணை கடன்தாரர்: 1. திருமதி மகாலட்சுமி. K, இணை கடன்தாரர்: 2. திரு.தீலிப் குமரேசன். R, அனைவரும் வசிப்பது D.No: 50, மங்கை நகர், ஆலங்காட்டுவலசு, மொடக்குறிச்சி, கிராமப்புறம், ஈரோடு, தமிழ்நாடு, இந்தியா – 638104. கடன் கணக்கு எண்: TN/ERD/ERDE/A000000768, கேட்பு அறிவிப்பு தேதி: 29.03.2024, நிலுவைத் தொகை ரூ. 16,23,992/- மற்றும் வட்டியுடன். சுவாதீன தேதி: 31.05.2024.
அசையா சொத்துக்களின் விபரங்கள்:

பகுதி I - சொத்தின் விளக்கம்	
சர்வே எண். / பரப்பளவு	R.S.No.602/1
மொத்த பரப்பளவு	1050 சதுர அடி
பிளாட்/தளம் எண்	தளம் எண். 50
இடம், கிராமம், நகரம், பதிவு, துணை மாவட்டம் போன்ற அமைவிட விபரங்கள்	ஈரோடு R.D., அவல்பூந்துறை S.R.D., மொடக்குறிச்சி தாலுகா, மொடக்குறிச்சி B கிராமம், R.S.No. 602/1, P.Hec. 1.32.0, Kist ரூ. 3.66, இதில் P.Ac. 2.96 (P.Hec. 1.20.0), வழங்கப்பட்ட சாலைகள், 'மங்கை நகர்' என பெயரிடப்பட்ட தளவமைப்பு, இந்த தள எண். 50ல், பின்வரும் எல்லைகள் அமைந்துள்ளது:

எல்லைகள்: வடக்கு: தளம் எண். 51, தெற்கு: தளம் எண். 49, கிழக்கு: தங்கமுத்து கவுண்டர் சொத்து மற்றும் சம்பூர்ணம் சொத்து, மேற்கு: 23 அடி அகலம் வடக்கு–தெற்கு நீளமான சாலை. **அளவீடு:** வடக்கு: கிழக்கிலிருந்து மேற்கு 39 ¾ அடி, தெற்கு: கிழக்கிலிருந்து மேற்கு 39 ½ அடி, கிழக்கு: வடக்கிலிருந்து தெற்கு 26 ½ அடி, மேற்கு: வடக்கிலிருந்து தெற்கு 26 ½ அடி. இதில் வடக்கில் கிழக்கு–மேற்கு 39 ¾ அடி, தெற்கில் கிழக்கு–மேற்கு 39 ½ அடி, கிழக்கில் வடக்கு–தெற்கு 26 ½ அடி, மேற்கில் வடக்கு – தெற்கே 26 ½ அடி, அதாவது, மொத்தம் 1050 சதுர அடி அல்லது 97.58 Sq.mtr, மொத்த பரப்பளவு, மொட்டை மாடி வீடுடன், 650 Sq.ft அளவில், சொல்லப்பட்ட சொத்துக்கு, தளவமைப்பில் உள்ள இணைக்கப்பட்ட அனைத்து வசதிகளும் உரிமைகள் மற்றும் பாதைகளுடன். கூறப்பட்ட சொத்து, மொடக்குறிச்சி டவுன் பஞ்சாயத்து எல்லைக்குள், R.S.No. 602/1 இல், தற்போது துணைப்பிரிவு R.S.No.602/1B1 இன் படி, தற்போது துணைப்பிரிவு R.S.No.602/1B1A3 இன் படி உள்ளது.

நாள்: 01.06.2024 இடம்: நாமக்கல்/ஈரோடு
திரு. G. நவீன் (கிளஸ்டர் மேலாளர்–சட்டம்), அதிகாரபூர்வ அதிகாரி
இந்துஜா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
தொடர்பு எண்கள்: RLM - சரவணபவன். S: 9176664992, RRM - தினேஷ் பாபு. S: 9500096714, CLM - G. நவீன்: 9741936456.

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புநடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

வ. எண்.	கடன் கணக்கு எண் / கடன்தாரர்/ அடமானதாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை in INR	டேவணித்தொகை (EMD) in INR
கிளை அலுவலகம்: கதவு எண்.356/40, SKBS டவர், பேருந்து நிறுத்தம், நாமக்கல், கச்சேரி தெரு, வேலூர் ரோடு, CHB காலனி, மகாதவபுரம், திருச்செங்கோடு - 637211					
1.	1181210050000006 1.Mr.குமார் K, 2.Mr.சக்தீஸ்வர் K 3. Mrs.சுசிலா K	(i) 03.07.2021 02.07.2021 அன்றுள்ளபடி ₹ 18,67,880/- (ரூபாய் பதினெட்டு லட்சத்து அறுபத்து ஏழாயிரத்து எண்ணூற்று எண்பது மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் 27.07.2022 & நேரடியான சுவாதீனம் 28.12.2023	06.05.2024 அன்றுள்ளபடி ₹ 31,46,564.70 (ரூபாய் முப்பத்தோரு லட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து ஐநூற்று அறுபத்து நான்கு மற்றும் பைசா எழுபது மட்டும்)	₹ 12,81,000/- (ரூபாய் பன்னிரெண்டு லட்சத்து எண்பத்தோராயிரம் மட்டும்).	₹ 1,28,100/- (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்து எட்டாயிரத்து நூறு மட்டும்)
சொத்து விவரம் : நாமக்கல் பதிவு மாவட்டம், திருச்செங்கோடு சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, சர்வே எண்.473/1, புஞ்சை ஏக்கர் 8.20 சென்ட், கிஸ்ட் ரூ.18.43, வடக்கு பக்கம் புஞ்சை பரப்பு ஏக்கர் 2.00 சென்ட் மீதமுள்ள புஞ்சை பரப்பு ஏக்கர் 6.20 சென்ட், கிழக்கு பக்கம் புஞ்சை ஏக்கர் 3.10 சென்ட், புஞ்சை சொத்துக்கள் வகையறா ரோடு நிலங்கள் லே-அவுட் திட்டம். புதிய சப்-டிவிஷன் சர்வே எண்.473/1B4D1AA, புஞ்சை ஹெக்டேர் 1.24.0, **வீட்டு மனை எண்.3, ஆனங்கூர் கிராமம், திருச்செங்கோடு தாலுகா, நாமக்கல் மாவட்டம் என்னும் முகவரியில் கிழக்கு மேற்கு இருபக்கமும் 58 ¾ அடி தெற்கு வடக்கு இருபக்கமும் 20 அடி ஆக மொத்தம் 1175 சதுர அடி அல்லது 109.16 சதுர மீட்டர் வீட்டு மனை அதனுடன் கட்டிடம், வழக்கமான வழிப்பாதை பொது ரோடுகளை உபயோகிக்கும் பொது உரிமைகள்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: 25 அடி தெற்கு வடக்கு ரோட்டிற்கு கிழக்கு, மூன்றாவது நபர் சொத்துக்கு மேற்கு, மனை எண்.4-ல் உள்ள வீட்டிற்கு வடக்கு, மனை எண்.1, 2-ல் உள்ள வீட்டு மனைக்கு தெற்கு.					
கிளை அலுவலகம்: எண்.30/3-2, மெயின் ரோடு, முல்லை நகர், சூரமங்களம், சேலம், தமிழ்நாடு 636005					
2.	1172210080000071 1.Mr.S.கௌரிராஜன் 2.Mrs.G.லதா 3.Mr.S.சதீஷ் குமார் 4.Mr.S.முருகன்	(i) 16.02.2022 15.02.2022 அன்றுள்ளபடி ₹ 10,57,794/- (ரூபாய் பத்து லட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து எழுநூற்று தொண்ணூற்று நான்கு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் 20.07.2022 & நேரடியான சுவாதீனம் 21.03.2024	06.05.2024 அன்றுள்ளபடி ₹ 11,95,073/- (ரூபாய் பதினோறு லட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து எழுபத்து மூன்று மட்டும்)	₹ 18,51,000/- (ரூபாய் பதினெட்டு லட்சத்து ஐம்பத்தோராயிரம் மட்டும்).	₹ 1,85,100/- (ரூபாய் ஒரு லட்சத்து எண்பத்து ஐந்தாயித்து நூறு மட்டும்)
சொத்து விவரம் : சேலம் மேற்கு பதிவு மாவட்டம், மகுடன்சாவடி சார்பதிவு அலுவலக எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்.262/5, புதிய சர்வே எண்.868/4, **சொத்து வரி ரசீது கதவு எண்.352, எடங்கனசாலை கிராமம், சங்ககிரி தாலுகா என்னும் முகவரியில் 2292¾ சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம்,** அதனுடன் அனைத்து அனுபந்தங்கள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு திசையில் 12.6 மீட்டர், கிழக்கு மேற்காக தெற்கு திசையில் 17.6 மீட்டர், தெற்கு வடக்காக கிழக்கு திசையில் 13.0 மீட்டர், தெற்கு வடக்காக மேற்கு திசையில் 10.8 மீட்டர் (இதிலிருந்து), கிழக்கு மேற்காக 5.8 மீட்டர் (இதிலிருந்து), வடக்கு திசையில் 2.6 மீட்டர், மொத்தம் 2292¾ சதுர அடி. எல்லைகள்: நத்தம் சர்வே எண்.868/7 கிழக்கு மேற்கு பொது தெருவுக்கு வடக்கு, நத்தம் சர்வே எண்.868/2, சர்வே எண்.868/3 -க்கு தெற்கு, நத்தம் சர்வே எண்.868/2,5,6-க்கு கிழக்கு, நத்தம் சர்வே எண்.868/7-க்கு மேற்கு.					

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 17.07.2024 காலை 11.00 மணியிலிருந்து மதியம் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: 16.07.2024 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: 15.07.2024 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.G.நடராஜன்: Mob: 95512 77444 / Mr.R.புஷ்பகாந்த்: Mob: 98431 14222 / Mr.M.மனோஜ் - Mob: 94446 43998

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. **(தொடர்புக்கு: Mr.பிரபாகரன் Mob: 74182 81709)** உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**

விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

தேதி: 01.06.2024
இடம்: பெங்களூரு

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by M. Jegadesh Kumar at Survey Nos. 391/1 Part & 391/2, Kamaraj Road, Uppilipalayam Village, Coimbatore-641015 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).